# SUBORDINATE COURT, UTHANGARAI

| | | |
|---|---|---|
| **Original Suit No.** | : | **OS.No. 124 /2018** |
| **Deposition of witness for** | : | **Defendant** |
| **Serial No. of Witness** | : | **DW.4** |
| **Name** ∘ | : | **திரு.தினேஸ்குமார்** |
| **Father/Husband Name** | : | **திரு. K, மாது** |
| **Village** | : | **ஊத்தங்கரை** |
| **Taluk** | : | **ஊத்தங்கரை** |
| **Age** | : | **33** |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 25th June - 2025** | | |

**முதல் விசாரணை**

நான் ஊத்தங்கரை நகர கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சென்னப்பநாய்கனூர் பட்டா எண் 143 UDR படி செல்லியம்மாள் பெயரில் உள்ளது. தற்போது பட்டா எண் 143 தலைக்கொன்டான் மனைவி பாதுமணி தலைக்கொன்டான் மகன் பிரபாகரன், தலைக்கொன்டான் மகள் மாதுபிரியா, சென்றாயன் மகன் கிருஷ்ணன் சென்றாயன் மனைவி சென்னன் ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது. அதன் சர்வே எண் 1/3D ஆகும். அதன் பரப்பு 0.096.0 ஆகும். பட்டா எண் 533 சர்வே எண் 1/3D1 தலைக்கொன்டான் மனைவி பாதுமணி பெயரில் உள்ளது. பரப்பு 0.63.97 ஆகும். பட்டா எண் 534 சர்வே எண் 1/3D2 சென்றாயன் மகன் சென்னன் பெயரில் உள்ளது. அதன் பரப்பு 0.32.03 ஆகும். மேற்படி சர்வே எண்களின் காளிரத்திரம் மனைவி கௌரி பெயரில் பட்டா ஏதும் இல்லை. மேற்படி பட்டா எண் 143 UDR அ - பதிவேடு மு.சா.ஆ. 1 ஆகும். தற்போதைய பட்டா எண் 143 க்கான சிட்டா

மு.சா.ஆ. 2 ஆகும். பட்டா எண் 533- க்கான சிட்டா. மு.சா.ஆ.3 ஆகும். 534 க்கான சிட்டா மு.சா.ஆ.4 ஆகும்.

குறுக்கு விசாரணை

UDR பட்டா 143 ன் படி செல்லியம்மாள் பெயரில் 0.96.0 பரப்பு உள்ளது. மேற்படி செல்லியம்மாளின் கணவர் பெயர் குறிப்பிடவில்லை. மேற்படி பாதுமணியின் கணவர் பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பா, அம்மா பெயர் குறிப்பிடவில்லை. சர்வேஎண் 1/3D எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 23.08.2018 ஆகும். எதன் அடிப்டையில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 2018 ல் நான் அந்த கிராமத்தில் பணியில் இல்லை. அதனால் அதன் பற்றி எனக்கு தெரியாது. ஜீலை 2024 ல் தான் மேற்படி கிராமத்தில் பணியில் சேர்ந்தேன். நான் கொண்டுவந்துள்ள ஆவணங்களின் துணை வட்டாட்சியரிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். செல்லியம்மாள் வாரிசுகள் பற்றிய விவரம் தெரியுமா என்றால் கிராமத்தில் விசாரித்தேன் அவருக்கு 3 பெண் பிள்ளைகள், 3 ஆண் பிள்ளைகள் உள்ளதாக சொன்னார்கள். மகன் பெயர் தலைக்கொன்டான், 2 வது பெயர் P.C. கிருஷ்ணன், 3 வது மகன் சென்னன். மகள்கள் கௌரி, லட்சுமி, முருகம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி யோர்களின் 3 பெண் பிள்ளைக்ள் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். ஆண் வாரிசுகளின் தலைக்கொன்டான் என்பவர் இறந்துவட்டார். P.C. கிருஷ்ணன் உயிருடன் உள்ளார். சென்னன் உயிருடன் உள்ளாரா என்பது தெரியவில்லை. எதன் அடிப்படையில் உட் பிரிவு செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் வட்டாட்சியர் அலுவலகத்தில் அதற்குரிய கோப்பு இருக்கும்.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.